**IN THE COURT OF PRINCIPAL DISTRICT MUNSIF, AMBASAMUDRAM.**

**O.S.NO. : 261/2015**

**Deposition of Witness**: Pw3

NAME : மூர்த்தி

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of **13.03.2024**

**முதல்விசாரணை (வாதி தரப்பில்):**

1) நான் அம்பாசமுத்திரம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்யப்பட்டு அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள அறிக்கை மற்றும் மாதிரி வரைபடம்தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அந்த அறிக்கை நீ.ம.சா.ஆ.1. மாதிரி வரைபடம் நீ.ம.சா.ஆ.2. புலவரைபடம் நீ.ம.சா.ஆ.3. தாவா சொத்திற்கான அடங்கல் நீ.ம.சா.ஆ.4.

2) நீ.ம.சா.ஆ.2 மாதிரி வரைபடத்தில் 1ம் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ள ABCD சொத்தானது யாருடையது என்றால் வாதிக்கு சொந்தமானது ஆகும். AB சுவரின் நீளம் 20.6 அடி ஆகும். அந்த சுவர் கீழ்தலை தென்வடல் சுவர் ஆகும். BC சுவரானது வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உள்ளது. XYZ என மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சுவர் BC சுவரின் மீது கட்டப்பட்ட மாடி சுவர்

Sd/-Tr.P.K., PDM(FAC) Sd/-மூர்த்தி

என்றால் சரிதான். அந்த சுவர் செங்கல்களால் கட்டப்பட்டு பூசப்படாமல் இருந்தது.

3) நீ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையில் XYZ சுவரானது BC சுவர் மீது கட்டப்பட்டது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் பச்சை கலரில் காட்டப்பட்ட BC சுவருக்கு தொட்டடுத்து தென்புறம் நீல நிறத்தில் பிரதிவாதியின் சுவர் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த நீல நிறத்தில் உள்ள சுவரானது பச்சை நிறத்தில் உள்ள BC சுவரின் மேலே உள்ளது. அதை என்னால் சரியாக குறிப்பிட இயலாததால் மாதிரி வரைபடம் 2 ல் அதனைக் காட்டியுள்ளேன். நீ.ம.சா.ஆ.2 வரைபடத்தில் உள்ள பச்சை கலர் BC சுவர் அடித்தளத்தில் உள்ள வாதியின் வீட்டுச் சுவராகும். அதன் மீதுதான் நீலநிறத்தில் உள்ள பிரதிவாதி வீட்டின் சுவர் அமைந்துள்ளது.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1) நான் ஸ்தல ஆய்வு செய்தபோது இருதரப்பு கிரைய பத்திரத்தை வாங்கி பார்த்தேனா என்றால் அறிவிப்பு கொடுத்தேன். அவர்கள் கொடுக்கவில்லை. நான் கிரைய ஆவணத்தைக் கேட்டேனா என்றால் கேட்டேன். தரப்பினர்கள் தரவில்லை. ஆனால் கிரைய ஆவணத்தைக் கேட்டும் தரவில்லை என நான் நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் சொல்லவில்லை. பிராது சொத்தில் தென்வடல் தாவாவா? கிழமேல் தாவாவா? என்றால் தென்வடல் தாவா ஆகும். AD சுவரின் அளவு வாரண்டில் 31.625 அடியாகவும், ஸ்தலத்தில் 33.5 அடியாகவும் உள்ளதாக அறிக்கையில் நான் சொல்லியுள்ளேன். தென்வடல் DC சுவரின் மேல்தலை அளவு 19.8 அடியாகவும், தென்வடல் கீழ்தலை AB அளவு 20.6 அடியாகவும் நான் காண்பித்துள்ளேன்.

2) வாதியின் சுவரும், 2ம் பிரதிவாதியின் சுவரும் சேர்ந்து இருந்ததால் அளவுகளை மாடிப்பகுதிக்கு போய் அளக்கப்பட்டது என்று நீ.ம.சா.ஆ.1

Sd/–Tr.P.K., PDM(FAC) Sd/–மூர்த்தி

அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தென்தலை அளவை மட்டும் அவ்வாறு அளந்தேன். அவ்வாறு தாவா சொத்தை அளந்தபோது ஒரே அளவாக அளக்காமல் பகுதி பகுதியாக அளந்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் உபயவாதிகளின் வீட்டின் உள்பகுதியில் இருந்தே அளந்திருந்தால் ஒரே அளவாக இருந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.1 அறிக்கையில் BC சுவர்தான் வாரண்ட் 2ம் தபசில் சொத்து என்றும், தென்வடல் 8 இஞ்ச் அடியாகவும், கிழமேல் 26 அடியாகவும் வாரண்டில் காட்டப்பட்டுள்ளது எந்த பகுதியை குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் BC சுவரின் 8 இஞ்ச் என்பது தென்வடல் அளவு ஆகும். கிழமேல் 26 அடி ஆகும். என் அறிக்கைக்கும், என் சாட்சியத்திற்கும் மேற்படி அளவுகள் முரணாக உள்ளது என்றால் சரியல்ல.

3) BC சுவருக்கு தெற்கே பிரதிவாதி வீட்டின் கீழ்தலை தென்வடல் அளவு சரியாக இருந்தது என்று என் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அது என்ன அளவு உள்ளது என்பதை சொல்லவில்லை என்றால் புலவரைபடத்தின்படி அளவு சரியாக இருப்பதாக சொன்னார். ஆனால் அதன் அளவை நான் சொல்லவில்லை. அதனால் பிரதிவாதி வீட்டின் கிழமேல், தென்வடல் அளவு அறிக்கை மற்றும் வரைபடத்தில் இல்லை என்றால் சரிதான். வாரண்டில் இல்லாத சொத்தினை அளப்பதற்கு வாதிகள் ஆட்சேபணை செய்ததால் அளக்கவில்லை.

4) பொதுவாக எல்லா வழக்கிலும் நீதிமன்ற ஆணையர்கள் உபயவாதிகள் சொல்லும் அளவுகளை எடுத்துவிட்டு அறிக்கையில் உபயவாதிகள் வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் அளவுகளை எடுத்ததாக அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பத்திரத்தில் என்ன அளவு உண்டோ அதுதான் வழக்கின் தரப்பினரைக் கட்டுப்படுத்தும் என்றால் அதுபற்றி என்னால் கருத்து சொல்ல இயலாது. நீதிமன்றம் எனக்கு வழங்கிய பணியை

Sd/-Tr.P.K., PDM(FAC) Sd/-மூர்த்தி

நான் சரிவர செய்யாமல் அரைகுறையாக அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) நீதிமன்ற ஆணையர் பணி முடிந்தபிறகு நானும், வாதியின் வழக்கறிஞரும் பிரதிவாதியின் வீட்டை அளக்கப்போனோம் என்றும், அதனை பிரதிவாதியின் வழக்கறிஞர் ஆட்சேபணை செய்ததால் எனக்கும், பிரதிவாதியின் வழக்கறிஞருக்கும் இடையே மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் இல்லை. அதை சுட்டிக்காண்பித்து ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பி.சா.ஆ.2 புகைப்படம் யாருடைய வீடு என்றால் என்னால் அதைப் பார்த்து சொல்ல முடியாது. பி.சா.ஆ.1ஐ பற்றி என்னால் சொல்ல முடியாது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 புகைப்படத்தில் உள்ள பூசப்படாத செங்கல் சுவர் 2ம் பிரதிவாதிக்கு சொந்தமான சுவர் என்று என்னால் கண்டுபிடிக்க இயலுமா என்றால் என்னால் சொல்ல இயலாது.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/–மூர்த்தி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

Sd/-Tr.P.Kumar, 13.03.2024
மு.மா.உ.நீ (மு.கூ.பொ)
அம்பாசமுத்திரம்.